Registered as a News Papei in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (20 - 01 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 386

## இன்றைய நிலையில் ஐ.நா.வால் எதையும் செய்துவிட முடியாது

(ஜெனிவா)

தன்னைத் தாக்கும் நாடுகள் எதனையும் திருப்பித் தாக்குவதற்கு அந்தந்த நாடுகளுக்கு உள்ள உரிமை ஐ. நா. சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி இஸ்ரேல் திருப்பித்தாக்கும் உரிமையைப் பெறுவதாக ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தலைவர் கூறியுள்ளார். இஸ்ரேல் மீதான ஈராக்கின் தாக்குதலைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செய (4ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டாவது தடவையாக

# ஈராக் இஸ்ரேலின் மீது ஏவுகணைத் தாக்குதல்

## 5 நிமிடத்திற்குள் 10 ஏவுகணைகள்

(டெல்அவிவ்)

இஸ்ரேல்மீது இரண்டாவது தடவையாக நேற்றுக்காலையும் ஈராக் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலின்போது ஐந்துநிமிட இடைவெளிக்குள் பத்து ஏவுகணைகள் டெல்அவிவைத் தாக்கின. ஓர் ஏவுகணை ஜெருசலேம்மீது வீழ்ந்து வெடித்தது. இத்தாக்குதலில் பலத்த சேதம் ஏற்பட்டதாக இஸ்ரேல் ரேடியோ அறிவித்தது.

ஈராக்கின் இந்த ஏவுகணைத் தாக்குதல் இலங்கை நேரப்படி காலை 10 30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டதாகஅறிவிக்கப்பட்டது. இந்த ஏவுகணைகள் ஈராக்கின் சொந்தத் தயாரிப்புக்களான ''சதாம்'', ''அக்பர்'' ஏவுகணைகளாக இருக்கலாமென பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

அதேவேளை இத்தாக்குதல் தொடர்பாகச் செய்தி வெளியிட்ட இஸ்ரேலியப்பாதுகாப்பு (4ஆம் பக்கம் பார்க்க)



மங்கையற்கரசி வித்தியாசாலையில் நடந்த பொங்கல் தினத்தன்று நிகழ்ந்த தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு வைபவத்தில் எடுக்கப்பட்ட படம்.

## 7 பேர் மூச்சுத் திணறி மரணம்

(டெல்அவிவ்)

ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதல்களினால் தற்பாதுகாப்பிற்காக முதல்நாள் கவசம் அணிந்த ஏழு பேர் மூச்சுத் திணறி உயிர் இழந்தார்கள் என இஸ்ரேலிய வானொலி அறிவித்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழி நிர்மூலம்

டெல்அவிவ்வில்நேற்றுவிழுந்த ஈராக்கிய ஏவுகணையொன்று இரும்புக் கம்பிகளால் கட்டப்பட்ட காங்கிறீற் தளத்தை சேதப்படுத்தி நிலத்தின் கீழே எட்டு அடி ஆழமும், இருபத்தைந்து அடி அகலமும் கொ (4ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்கள் மீது ஆனையிறவில் குண்டு வீச்சு

(ஆனையிறவு)

ஆனையிறவுப் பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசித் தாக்கியுள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு நிறைவுப் போட்டிகள்

மக்கள் தினசரி ''ஈழநாதம்'' முதலாவது ஆண்டை எதிர்வரும் 19ஆம் திகதியன்று நிறைவு செய்கின்றது. இதனை முன்னிட்டு வாசகர்கள் மத்தியில் நகைச்சுவைச்சித்திரப் (Cartoon) போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. தகுதியான ஆக்கங்கள் ''ஈழநாதம்'' இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுடன் தேர்ந்தெடுக்கப்படுபவை சிறப்புப்பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்படும். இப்போட்டிகள் தொடர்பான விபரங்களும், விதிமுறைகளும் நாளைய இதழில் வெளியிடப்படும்.

## ஈராக் மீது பதில் தாக்குதல் தவிர்க்கமுடியாததுஆகிவிட்டது

(டெல்அவிவ்)

''இஸ்ரேல் தாக்கப்பட்டால் ... டுள்ள போதிலும், ஈராக்கிய ... னார். எஞ்சியுள்ள ஈராக்கிய

ரேடியோ அறிவித்தது.

ஈராக்கின் இந்த ஏவுகணைத் தாக்குதல் இலங்கை நேரப்படி காலை 10 30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டதாகஅறிவிக்கப்பட்டது. இந்த ஏவுகணைகள் ஈராக்கின் சொந்தத் தயாரிப்புக்களான ''சதாம்'', ''அப்பர்'' ஏவுகணைகளாக இருக்கலாமென பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

அதேவேளை இத்தாக்குதல் தொடர்பாகச் செய்தி வெளியிட்ட இஸ்ரேலியப்பாதுகாப்பு (4ஆம் பக்கம் பார்க்க)

திணறி உயிர் இழந்தார்கள் என இஸ்ரேலிய வானொலி அறிவித்தது.
(4ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழி நிர்மூலம்

டெல்அவிவ்விலநேற்றுவிழுந்த ஈராக்கிய ஏவுகணையொன்று இரும்புக் கம்பிகளால் கட்டப்பட்ட கொங்கிறீட் தளத்தை சேதப்படுத்தி நிலத்தின் கீழே எட்டு அடி ஆழமும், இருபத்தைந்து அடி அகலமும் கொ (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு நிறைவுப் போட்டிகள்

மக்கள் தினசரி ''ஈழநாதம்'' முதலாவது ஆண்டை எதிர்வரும் 19ஆம் திகதியன்று நிறைவு செய்கின்றது. இதனை முன்னிட்டு வாசகர்கள் மத்தியில் நகைச்சுவைச்சித்திரப் (Cartoon) போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. தகுதியான ஆக்கங்கள் ''ஈழநாதம்'' இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுடன் தேர்ந்தெடுக்கப்படுபவை சிறப்புப்பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்படும். இப்போட்டிகள் தொடர்பான விபரங்களும், விதிமுறைகளும் நாளைய இதழில் வெளியிடப்படும்.

# ஈராக் மீது பதில் தாக்குதல் தவிர்க்கமுடியாததுஆகிவிட்டது

(டெல்அவிவ்)

''இஸ்ரேல் தாக்கப்பட்டால் பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபருக்கு ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துள்ளோம். இப்போது இஸ்ரேல் தாக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே பதில் தாக்குதல் கொடுக்கப்படும்'' இவ்வாறு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மோசே ஆரென்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கேட்டுள்ள போதிலும், ஈராக்கிய தாக்குதல் என்ற நாளாந்த அச்சுறுத்தலுக்குள் தமது நாட்டு மக்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறினார். எஞ்சியுள்ள ஈராக்கிய ஏவுகணைத் தளங்கள் அழிக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ள போதிலும் சொந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கிற்கு கிடைத்த வெற்றி

(பாக்தாத்)

வளைகுடாப்போர் இரண்டு நாட்களுக்குமேல் தொடரும் என்று கூறுவதே ஈராக்கிற்கு கிடைத்த வெற்றியாகும் என்று ஈராக்கிய தகவல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இரு தினங்களுக்கு முன்னர் போர் நிலைமை குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்றுக்கு பதில் அளிக்கையிலேயே ஈராக்கிய அமைச் (4ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா தவறிவிட்டது

அமெரிக்கத் தலைமையிலான நேச தேசப் படைத் தாக்குதல்கள் ஈராக்கின் போர் விமானங்கள், மற்றும் ஏவுகணை நிலையங்களை, ஏவுகணை ஆற்றல் வலுவை அழிக்கத் தவறி விட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## இன்னும் தாக்கும் பலம் உள்ளது

(றியாட்)

ஈராக்கிடம் இன்னமும் ஏவுகணைகள் கொண்டு தாக்கும் திறன் கணிசமான அளவு இருக்கிறது என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி லெப்டினன் ஜெனரல் ஹெலி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வளைகுடாப் போரில் அமெரிக்காவின் நிலை குறித்து செய்தி (4ஆம் பக்கம் பார்க்க)

## உறவுகள் மோசமடையும்

(திரிப்போலி)

'வளைகுடாப்போர் நீடிக்குமேயானால் அரபுக்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் இடையேயான உறவுகள் மேலும் மோசமடையும்' என லிபிய ஜனாதிபதி கடாபி எச்சரித்துள்ளார்.

ஆகவே போரை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என அவர் உலக நாடுகளையும், போரில் ஈடுபட்டிருக்கும் நாடுகளையும் கேட்டுக் கொண்டார்.

இந்தப் போரே மூன்றாம் உலகப் போராகவும் மாறக் கூடிய வாய்ப்புகள் பெரிதும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அணு ஆயுதம் இருக்கலாம்

(வாஷிங்டன்)

''ஈராக்கில் அணுஆயுதங்கள் தயாரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன'' என அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

வளைகுடா யுத்தம் குறித்து தொலைக்காட்சி மற்றும் வானொலியில் உரையாற்றிய ஜோர்ஜ் புஷ் ஈராக்கில் இத்தகைய நிலை இருப்பதனால் (4ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க படையை தாக்க ஜோர்டான் கோரிக்கை

(அம்மான்)

அமெரிக்க தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் இடங்களை தாக்குமாறு ஜோர்டான் நாடாளுமன்றம் ஏனைய அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளை கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் வளைகுடாப் போர் குறித்து பேச்சுவார்த்தை நடத்த கூட்டிய அவசர நாடாளுமன்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் ஜோர்டானிய நாடாளுமன்றம் அமெரிக்கா மற்றும் நேச நாடுகளின் இடைவிடாத விமானத் தாக்குதல்களை ''கொடூரமான நடவடிக்கைகள்'' எனக் குற்றஞ்சாட்டியது.
(4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் லேசான விடயமல்ல; செலவும் குறைவானதல்ல

- ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

''யுத்தம் இலேசான விடயமல்ல. செலவுகுறைவான ஒரு விவகாரமுமல்ல. முதல் நாள் வெற்றி குறித்து நாம் பெருமிதம் கொள்ள முடியாது''. இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக் தொடர்ந்தும் இஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் வெளியேற பணிப்பு

(பாக்தாத்)

ஈராக் நேற்று வளைகுடா யுத்தம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கும் அனைத்து வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. அவர்கள் ஜோர்டான் தலைநகரான அம்மானுக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் தங்க வைத்துள்ளனர். இது தற்காலிகமான ஒரு ஏற்பாடு என்று பாக்தாத் அறிவித்துள் (4ஆம் பக்கம் பார்க்க)

## தண்டிக்கப்பட வேண்டும்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் டெல் அவிவ்வில் இருக்கும் இஸ்ரேலிய பிரதமர் இர்சாக் ஷாமிருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஈராக்கின் மேற்குப் புறத்திலுள்ள ஏவுகணைத் தளங்களை அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி கூறியுள்ளார்.

இந்தத் தகவலை ஈராக்கிய வானொலியும் உறுதிப்படுத்தியது. ஈராக் தண்டிக்கப்படாமல் விடக் கூடாது என இஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை

(பாக்தாத்)

யுத்த நிறுத்தம் என்ற பேச்சிற்கு இடமேயில்லை; ஈராக்கைத் தாக்கியவர்கள் தண்டிக்கப்பட்டதன் பின்பே இதுபற்றி ஆலோசிக்கப்படும் என ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

## புதிய வழியில் தீர்வு

(மொஸ்கோ)

வளைகுடாப் பிரச்சினைக்கு மற்றுமோர் வழியில் தீர்வு காண சோவியத் யூனியன் முயன்று வருவதாக ''டாஸ்'' செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.
(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓர் ஏவுகணை 5 கோடி ரூபா

(கொழும்பு)

வளைகுடாப் போரில் பயன்படுத்தப்படும் ஓர் ஏவுகணையின் விலை ஐந்துகோடி ரூபா என (இலங்கை நாணயப்படி) கணக்கிடப்பட்டுள்ளது.

600 மைல் செல்லக்கூடிய ஏவுகணை ஒன்றின் பெறுமதியே இதுவாகும் என்று கூறப்படுகிறது.

வரிவிளம்பரம்

## வெளிவந்துவிட்டது

வர்த்தகமும் நிதியும் - உயர்தர வகுப்புகளுக்குரியது. உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன் B. Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B/1804)

### விற்பனைக்கு

தரமான வேப்பெண்ணெய். விளக்கெரிக்க கண்குளிர்ச்சிக்கு. நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை. போத்தல் ரூ. 80/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ் மாநிதிச் சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B/1882)

### தேவை

நெல்லி விதைகள் - மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B/1883)

# புகையிரத திணைக்களம் ஓய்வூதிய திகதி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை புகையிரத திணைக்களம் தனது ஓய்வூதியகாரர்களுக்குரிய 1991 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகளுக்குரிய திகதிகள் பற்றி அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலின்படி ஜனவரி-8, பெப்ரவரி-13 மார்ச்-12 ஏப்பிரல்-3, மே-13, ஜூன்-11, ஜூலை-9 ஆகஸ்ட்-6, செப்ரெம்பர்-10, ஒக்ரோபர்-14, நவம்பர்-12, டிசம்பர்-10 ஆகிய திகதிகள் முதல் அதேமாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக சகல வங்கிகளும் இவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக ஓய்வூதியக்காரர்களுக்கு முன்கூட்டியே வவுச்சர்களும் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு காசோலைகளும் அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த ஆண்டுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளே இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (22)

# கட்டுப்பாட்டுடன் கடமையாற்றியது

(டில்லி)

வெளிநாடுகளில் பல்வேறு பணிகளுக்கு அனுப்பட்டிருந்த இந்திய இராணுவத்தினர் மிகவும் சோதனையான சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டுடன் கடமையாற்றினார்கள் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் இராணுவ தினம் கொண்டாடப்பட்டது இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளிலும், இந்தியாவிலும் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயங்களிலும் இவர்கள் கடமையுணர்வோடு செயல்பட்டார்கள் என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கீரிமலையில் திருட்டு

(செ. த. மை.)

கீரிமலையில் உள்ள சமூக தொழில் விருத்தி நிலையத்திலுள்ள பல பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இங்குள்ள மக்கள் வங்கிக் கிளைக்குச் சொந்தமானவருக்கு அலுமாரிகள், பணம் வைக்கும் இரும்புப் பெட்டிகள் என்பனவும் களவாடப்பட்டுள்ளன. இக்கட்டடங்கள் அண்மையில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலாலும், ஷெல் தாக்குதலாலும் சேதமடைந்திருந்தது தெரிந்ததே

# இலவச மூக்குக் கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முந்நூறுக்கு மேற்பட்ட மூக்குக்கண்ணாடிகளைப் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது.

நோர்வே, ஜப்பான், கனடா நாடுகளின் லயன்ஸ் கழகங்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

பார்வை வலுக்கூடிய மூக்குக் கண்ணாடிகள் மேலும் தம்மிடம் கையிருப்பில் உள்ளதாகவும் இவற்றைப் பெற விரும்புவோர் தம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு கே. நவரத்தினம் (விமலாஸ்) தெரிவித்துள்ளார். (மூ)

# நியாயவிலை கடைகள்

(அரியாலை)

அரியாலையில் அகிலன் வீதி, ஷியாத் வீதி ஆகிய இரு முக்கிய இடங்களில் அரியாலைப் பிரதேச புலிகளின் மக்கள் முன்னணியினரால் இரு நியாயவிலை மக்கள் கடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கடைகளில் நியாயவிலையில் அரிசி, மா, மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் இக்கடைகளில் முண்டியடித்துப் பொருள்களை வாங்குவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேற்படி நியாயவிலைக் கடைகள் அரியாலைப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. பகீனால் திறந்து வைக்கப்பட்டது.

(21)

# யாழ். இந்து முன்னாள் பிரதி அதிபர் காலமானார்

(யாழ்ப்பாணம்)



யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபராக கடமையாற்றிய பொன். மகேந்திரன் மாரடைப்பால் வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் இக்கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். நீண்டகாலமாக ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் பிரதி அதிபராகவும் பணியாற்றினார். சிறந்த விளையாட்டுத்துறை வல்லுநரான இவர் யாழ். இந்துவின் விளையாட்டு சாதனைகளுக்கு பெரும் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நவாலி சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

(செ. த. மை)

நவாலியில் அமைந்துள்ள சந்தையில் சுகாதாரச் சீர்கேடுகள் மலிந்துள்ளன. மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படும் கடை துப்பரவாக இல்லை. கடந்த ஒரு வருட காலமாக இறைச்சி விற்பனைக்காக வெட்டப்படும் மாட்டின் எலும்புகள் அப்புறப்படுத்தப்படாமல் பெரும் குவியல்களாகவும் ஆங்காங்கே சிதறி இடக்கக் காணப்படுகின்றன. இச்சந்தையிலிருந்து எழும் துர்நாற்றம் சூழவாழும் மக்களின் சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிப்பதாக அமைந்துள்ளது. இதுசம்பந்தமாக சுகாதாரப் பகுதியினருக்கும் கிராமசபை அலுவலகத்தினருக்கும் புகார் செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இங்கு இறைச்சி விற்பனைக்காக வெட்டப்படும் மாடுகள் சுகாதாரப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதில்லை என்றும் அறியப்படுகிறது.

# பகல் நேர திருட்டு பிடிபட்டது

(பண்டத்தரிப்பு)

பட்டப்பகலில் ஆலயத்தில் திருட முற்பட்டவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பண்டத்தரிப்பிலுள்ள அந்தோனியார் தேவாலயத்திற்குள் புகுந்த இரு இளைஞர்கள் அங்கிருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு உண்டியலை உடைக்க முற்பட்ட போது அங்கு வழிபாட்டிற்கு வந்த பெண்மணி ஒருவர் இவர்கள் மீது சந்தேகம் கொண்டு மணியை அடித்தாராம். இதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்தபொது மக்களுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் திருடரைத் துரத்திச் சென்றனர். இதில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பண்டத்தரிப்பு பிரதேச காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்

## யாழ்நகரில்!

நவீன ''மொட்ஸ்ரை'' லில் பெண்கள் சிகை - ஆண்கள் சிகை, முக அலங்காரங்களைச் செய்து கொள்ள நாட வேண்டிய இடம்

# நியூ குயின்ஸ் சலூன்

(லேடிஸ் அன் ஜென்ஸ்)

இயக்குநர்: ப. சிவா

வஸ்தியன் சந்தி, றேமன்ஸ் கட்டடம்.

393, பிரதானவீதி. யாழ்ப்பாணம்.

(B/1876)

## அஞ்சலி

### அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் நீண்டகாலம் கல்லூரியின் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற

செய்து கொள்ள நாட வேண்டியது


# நியூ குயின்ஸ் சலூன்

(லேடிஸ் அன் ஜென்ஸ்)

இயக்குநர்: ப. சிவா

வஸ்தியன் சந்தி, றேமன்ஸ் கட்டடம்.

393, பிரதானவிதி, யாழ்ப்பாணம்.

(B/1876)


## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை
## எரிபொருள் விநியோக
## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்வனவில் விநியோகிப்பதற்கு தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2. SAE 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர் அல்லது மொத்தம் 2000 லீற்றர்.

வாராந்தக் கூறுவிலைகள் 30-04-1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது. ஆனால் கூறுதாரர்கள் விரும்பினால் எந்தக் கால எல்லை வரை இந்த கூறுவிலைகள் ஏற்புடையன எனக்குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

கூறுவிலைகள் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 28-01-1991 காலை 0 00 மணிக்கு முன் பல்கலைக்கழக பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்

யாழ்ப்பாணப் பல்கலை கழகம், பதிவாளர்.
யாழ்ப்பாணம்.
1991-01-18

(B-1880)

பட்டுள்ளன. இக்கட்டடங்கள் அண்மையில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலாலும், ஷெல் தாக்குதலாலும் சேதமடைந்திருந்தது தெரிந்ததே

விலைக் கிடைக்க யாழ்ப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு.பசீலால் திறந்து வைக்கப்பட்டது.

(21)

# அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் நீண்டகாலம் கல்லூரியின் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவருமாகிய

அமரர் பொன். மகேந்திரன் அவர்களின்

திடீர் மறைவுக்கு யாழ் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது அஞ்சலியையும், அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கின்றது.

க. சி குகதாசன்
தலைவர் / அதிபர்.

க. பூபாலசிங்கம்
பொதுச்செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம்.

(B-1885)

# முக்கிய அறிவித்தல்

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகாலமாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற

## திரு பொன். மகேந்திரன்

அவர்களின் திடீர்மறைவு காரணமாக, 18-01-1991 (பிற்பகல் நிகழ்ச்சிகளும்) 19, 20 - 01 - 1991ஆம் நாள் நிகழ்ச்சிகளும் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சுந்தரம் டிவகலாலா,
சே சிவராஜா
செயலர், நூற்றாண்டு
விழாச்சபை.

க. சி. குகதாசன்
தலைவர், நூற்றாண்டு
விழாச்சபை

(B-1884)

பட்டப்பகலில் ஆலயத்தில் திருட முற்பட்டவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப் பட்டார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பண்டத்தரிப்பிலுள்ள அந்தோனியார் தேவாலயத்திற்குள் புகுந்த இரு இளைஞர்கள் அங்கிருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு உண்டியலை உடைக்க முற்பட்ட போது

மீது சந்தேகம் கொண்டு மணியை அடித்தாராம். இதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்த பொது மக்களுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் திருடரைத் துரத்திச் சென்றனர். இதில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பண்டத்தரிப்பு பிரதேச காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்

# நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 20

1984ஆம் ஆண்டு கரவெட்டியில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கையில் ஸ்ரீலங்கா பொலிசினால் சுட்டுக்கொல்லப்பட்ட

**சி. ராஜ்மோகன்** (தும்பளை - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு மணியந்தோட்டத்தில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

**அ. கணேஷ்** (அ. சத்திவேந்திரா - சுன்னாகம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

வேங்கைக் கூட்டம் நாங்கள்
வெற்றி அடைவோம் போரில்
தாங்கும் ஆயுதம் பாரும்
தமிழ் மண் காக்க வாரும்
ஏங்கும் இதயம் வேண்டாம்
எதற்கும் உறுதி கொள்ளும்
தூங்கும் விழிகள் இல்லை
தொடரும் எங்கள் பாதை.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1873)

**★ சிந்தனைக்கு ★**

அனுபவத்தின் பயன் அதிகம்
பார்ப்பதில் அல்ல; அறிவோடு
பார்ப்பதில் தான்.

— ஸர் வில்லியம் ஆஸ்லர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 20-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ. எண் 05

# அறிவு ஆக்கத்திற்கானதே மோசடிக்கானதல்ல.

தமிழீழப் போராட்டம் சாதித்தவற்றுள் முக்கியமானதொன்று தமிழ் மக்களுக்கு இன்றைய உலகினைப்பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியமையும், அதனைப் புரிந்து கொள்ள உதவியமையும் ஆகும். தமக்குள்ளேயே உலகம் அடங்கியுள்ளது என்ற எண்ணத்துடன் வாழ்ந்த மக்களுக்கு சர்வதேச நடப்புகளையும், எம்மீது அவற்றின் பாதிப்புக்களையும் இன்று போராட்டம் புரிய வைத்துள்ளது சுருக்கமாகக் கூறின் போராட்டம் உலகைப் புரிய வைத்துள்ளது.

இன்று உலகில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்கள் பற்றியும் அவை தமிழ் மக்களின் வாழ்க்கையில்- போராட்டத்தில் - பொருளாதாரத்தில் - எவ்விதமான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதைப் பற்றியும் விளங்கிக் கொள்கின்றார்கள்; அல்லது விளங்கிக்கொள்ள முற்படுகின்றார்கள்;

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷில் இருந்து ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் வரையிலும் ஐ நா. சபையில் இருந்து நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு வரையிலும் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் அதாவது உலக நடப்பிற்கும் தமக்கும் இடையில் உள்ள தூரத்தைச் சுருக்கிக் கொண்டு விட்டார்கள் அத்தோடு உலக நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் உலகில் உள்ள ஒவ்வொருவரும் தமக்குச் சாதகமாக எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பதையும் மக்கள் புரிந்து கொண்டார்கள். இதனை அவர்கள் புரிந்து கொள்வதற்கு தமிழர் தேசிய பிரச்சினையை ஒவ்வொரு நாடும் எவ்வாறு பயன்படுத்த முற்பட்டன என்பதே போதியதாக இருந்தது;

இதேபோன்றே சர்வதேச செய்தி நிறுவனங்கள், ஒலிபரப்பு ஸ்தாபனங்கள் என்பனவும் தமது நலனின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என்பதையும் போராட்டம் மக்களுக்குப் புரியவைத்துள்ளது. ஒரு சம்பவம் வெவ்வேறு செய்தி ஸ்தாபனங்களால் எவ்வாறெல்லாம் திரித்துக் கூறப்படுகின்றன என்பதையும் மக்கள் அனுபவ ரீதியாகப் போராட்ட காலத்தில் பெற்று விட்டார்கள். அதாவது பி.பி.ஸிக்கும், இந்திய வானொலிக்கும், சிறிலங்கா ஒலிபரப்புச் சேவைக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்பதை மக்கள் நேரடி உண்மைகள் மூலம் கண்டுள்ளனர்.

இவ்வாறாக, போராட்டத்தின் மூலம் மக்கள் பெற்ற

# கிளி. விவசாய பீட காளான்

# விதைகள் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)
புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கிளிநொச்சி விவசாயபீடத்தில் உருவாக்கப்பட்ட காளான் விதைகளை இம்மாத முடிவுக்குள் விற்பனைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பல்கலைக்கழக பதிவாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த காளான் வளர்ப்பு திட்டத்திலிருந்து கிடைக்கும் காளான் விதைகள் மக்களுக்கு விற்கப்பட்டதும் மீண்டும் விசேட இனக்காளான்கள் உற்பத்தி செய்வதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் கூறியதுடன் மக்கள் இந்த விதைகளைப் பெற்று உமி வைக்கோல் போன்ற மெதுமையான இடங்களில் இடும் போது அவை முளைக்கும் அவற்றை கறி சமைப்பதற்கு பயன்படுத்தலாம். இது ஒரு புரதச்சத்து மிகுந்த ஒரு சிறந்த உணவாகும் எனவும் அவர் கூறினார். (லேநு)

## பல்தேசியப் படைகள்

# ஐ. நாவின் படையல்ல

## ஐ. நாவின் இந்தியத் தூதுவர்

(டில்லி)
எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வளைகுடாவில் போர் தவிர்க்கப்பட முடியாமல் போனது துரதிர்ஷ்டவசமானது என்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கருத்து வெளியிட்டுள்ளார். இதே வேளை ஐ நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி கருத்து வெளியிடுகையில், வளைகுடாவில் போரிடும் பல்தேசப் படைகள் ஐக்கிய நாடுகள் சபையின் படையுமல்ல, அமைதி காப்பதற்கான நோக்கம் கொண்டவையுமல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை இந்தியா எப்போதும் ஆதரித்தே வந்துள்ளது. ஆனால் ஈராக் மீதான போர் தொடுக்கப்பட்டிருப்பது ஐ. நாவின் தீர்மானத்திற்கு அமைவானதல்ல எனக்குறிப்பிட்டுள்ளார்.

## வ்ளைகுடாவில் ஈராக்கைச் சூழ

# 6 விமானந்தாங்கி உட்பட 70அமெரிக்கப் போர்க்கப்பல்கள்

(வாஷிங்டன்)
ஈராக்கைச் சுற்றி மொத்தம் 70 அமெரிக்கக்கப்பல்கள்நிலை கொண்டுள்ளன, இதேவேளை 450 க்கும் மேற்பட்ட பலரகப் போர் விமானங்களுடன், 6 விமானந்தாங்கிக் கப்பல்களும் வளைகுடாவிலும், அராபியக் கடலிலும் தரித்துநிற்கின்றன.

தியேடர் ரூஸ்வெல்ட், ஜோன்எவ் கெனடி, மிட்வே, ரேஞ்சர், அமெரிக்கா, சல்வரி மோசா என்ற விமானந்தாங்கிக் கப்பல்களே வளைகுடாப் பிரதேசத்தில் தரித்து நிற்கின்றன.

# 64 இஸ்ரேலிய விமானங்கள் போரில் பங்குபற்ற விரைவு

(டெல்அவிவ்)
இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டபின், இஸ்ரேல் தன் விமானப்படையையும் வளைகுடாப்போருக்கு அனுப்பிவைத்துள்ளது. 64 இஸ்ரேலியப் போர் விமானங்கள் பன்னாட்டுப் படைகளுடன் இணைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் விமானப்படை பாக்தாத் மீது தொடுத்த ஏவுகணை ஒன்று வானிலேயே தடுத்துத் தகர்க்கப்பட்டதாக அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு

## விவேகத்துடன் நடக்கவும்

(மொஸ்கோ)
''இஸ்ரேல் மீதான தாக்குதல் புதிய அரபு இஸ்ரேல் போரை தூண்டிவிடும் நோக்கத்தில் அமைந்திருக்கிறது'' என சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் கண்டித்துள்ளார்.

இதனை உணர்ந்து அரபு உலகம், விவேகத்துடனும், நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என கொர்பச்சேவ் கேட்டுக்கொள்கிறார்.

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம்காலை எட்டுமணியளவில் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. சேதவிபரம் தெரியவில்லை;

## இளைஞர் பலரை காணவில்லை

அவர்கள் புரிந்து கொள்வதற்கு தமிழர் தேசிய பிரச்சினையை ஒவ்வொரு நாடும் எவ்வாறு பயன்படுத்த முற்பட்டன என்பதே போதியதாக இருந்தது.

இதேபோன்றே சர்வதேச செய்தி நிறுவனங்கள், ஒலிபரப்பு ஸ்தாபனங்கள் என்பனவும் தமது நலனின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என்பதையும் போராட்டம் மக்களுக்குப் புரியவைத்துள்ளது. ஒரு சம்பவம் வெவ்வேறு செய்தி ஸ்தாபனங்களால் எவ்வாறெல்லாம் திரித்துக் கூறப்படுகின்றன என்பதையும் மக்கள் அனுபவ ரீதியாகப் போராட்ட காலத்தில் பெற்றுவிட்டார்கள், அதாவது பி.பி.ஸிக்கும், இந்திய வானொலிக்கும், சிறிலங்கா ஒலிபரப்புச் சேவைக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்பதை மக்கள் நேரடி உண்மைகள் மூலம் கண்டுள்ளனர்.

இவ்வாறாக, போராட்டத்தின் மூலம் மக்கள் பெற்ற விழிப்புணர்வானது தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்து மிகவும் வரவேற்கத் தக்கதாகும், அதன் சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் உள்ளது.

ஆனால், இவ்வாறு பெறப்பட்ட விழிப்புணர்வானது சமூகத்திற்குக் கேடுவிளைவிக்க கூடியதாகவும், ஒரு சிலரின் நன்மைக்காகவும் பயன்படுவது துரதிர்ஷ்டவசமானதாகும். எடுத்துக்காட்டாக வளைகுடாப் போர் ஆரம்பித்த அன்று காலை யாழ் நகரில் 60 ரூபாவாக விற்ற ஒருபோத்தல் மண்ணெண்ணை அச்செய்தி வந்ததும் பெருமளவில் மறைக்கப்பட்டதோடு, 120 ரூபா அளவிலும் விற்பனையானது. அதாவது வளைகுடாப் போர் சர்வதேச எண்ணெய் வர்த்தகத்திலும், இலங்கைக்கான எண்ணெய் வருகையிலும் ஏற்படுத்தப் போகும் பாதிப்பைக்கொண்டே இந்த விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதுவும் மக்கள் குறிப்பாக வியாபாரிகளின் விழிப்புணர்வையே காட்டுகின்றது.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் நிகழ்ந்த சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக பிரித்தானியாவிற்கு எதிராக பிரான்சு தனது படைகளை அனுப்பியது. இவ்வாறு சென்ற போர்வீரர்கள் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரான்சில் புரட்சி ஒன்று ஏற்பட காரணமாக இருந்தார்கள் என வரலாறுகள் தெரிவிக்கின்றன. அதாவது அமெரிக்க சுதந்திரப் போரில் பங்குபற்றிய பிரெஞ்சு வீரர் தமது சுதந்திரம் பற்றியும் சிந்தித்தார்கள்; செயற்பட்டார்கள் என்பதையே இது காட்டுகின்றது.

இது போன்று ஒரு நாட்டின் அனுபவத்தில் இருந்து பெறப்படும் விழிப்புணர்வும், அனுபவமும் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு மட்டுமே பயன்படுதல் நல்லது. அவற்றை தீயவழியில் பயன்படுத்துவது சமூகத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியதாகும்.

அதிலும் குறிப்பாக ஒரு பேரினவாத அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் சமூகத்தினருக்கு இருத்தல் கூடாது. இன்றைய வாழ்க்கையில் தமக்கு எவ்வளவு நெருக்கடியுள்ளதோ அதேபோன்று மற்றவர்களுடைய நெருக்கடிகளையும் உணரவேண்டும். அதாவது சகோதரத்துவ உணர்வு வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு மனிதனின் விழிப்புணர்வும் அவனது சமூகத்தின் விடுதலைக்கு வழிவகுக்கும்.

---

# 64 இஸ்ரேலிய விமானங்கள் போரில் பங்குபற்ற விரைவு

(டெல்அவிவ்)

இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டபின், இஸ்ரேல் தன் விமானப்படையையும் வளைகுடாப்போருக்கு அனுப்பிவைத்துள்ளது. 64 இஸ்ரேலியப் போர் விமானங்கள் பன்னாட்டுப் படைகளுடன் இணைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் விமானப்படை பாக்தாத் மீது தொடுத்த ஏவுகணை ஒன்று வானிலேயே தடுத்துத் தகர்க்கப்பட்டதாக அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு ஈரான், சிரியா பாராட்டு

(தெஹிரான்)

இஸ்ரேல் மீதான ஈராக்கின் தாக்குதலை ஈரானும், சிரியாவும் வரவேற்றுள்ளன.

இதுபற்றிச் செய்தி வெளியிட்ட தெஹிரான் வானொலி ஈராக்கின் தாக்குதல் நியாயமானதே என கருத்துத் தெரிவித்துள்ளதோடு, வளைகுடாப் போருக்கு இஸ்ரேல் தூண்டுகோலாக இருந்தது எனவும் தெரிவித்தது.

மேலும் இருபது வருடங்களாக எதிரிகளாக இருந்த சிரியாவும் ஈராக்கின் இத்தத் தாக்குதலுக்குப் பாராட்டுத் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்ற போதும், சிரியா உத்தியோகபூர்வமாக இதனை அறிவிக்கவில்லை. அதேவேளை, சிரியாப் படைகள் ஆயிரக் கணக்கில் பல்தேசிய இராணுவத்தினருடன் சவூதி அரேபியாவில் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

# இலங்கையரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## - சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து, வளைகுடாவில் நிலைமைமோசமானால்இலங்கையர்களைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு போவதற்கு வெளி விவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் அவர்களின் உதவியை நாடியுள்ளார்.

அவசியம் ஏற்பட்டால் வளைகுடா நாடுகளில் வாழும் இலங்கையர் இடம் பெயர்வதற்கான உதவிகளை வழங்கச் சர்வதேச மனிதநேய ஸ்தாபனங்கள் முன்வரும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவிற்கு புதிய அரச அதிபர்

(வவுனியா)

வவுனியா புதிய அரசாங்க அதிபராக திரு. மார்க்கண்டு அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் அரச அதிபராக இருந்த திரு. தர்மலிங்கம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றது தெரிந்ததே. (தி)

---

...சேவ கேட்டுக்கொள்கிறார்.

# ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை எட்டுமணியளவில் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. சேதவிபரம் தெரியவில்லை.

# இளைஞர் பலரை காணவில்லை

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியை நோக்கிச் சென்ற தமிழ் இளைஞர்கள் பலரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் நெளுக்குளம் பகுதியில் வசிக்கும் தம்பாபிள்ளை என்பவர் வவுனியா நகரப்பகுதிக்குச் சென்றபோது இராணுவ உளவாளிகள் என்று கூறப்படும் சிலரால் கைதுசெய்யப்பட்டார், இவரின் தற்போதைய நிலை பற்றி அறியப்படவில்லை.

இதேபோல் ஓமந்தையைச் சேர்ந்த சிலரும் வவுனியா நகரப் பகுதியில் காணாமல் போயுள்ளனர். (தி)

# கொடுப்பனவு நடவடிக்கைகள் பூர்த்தி

யாழ். மாவட்ட ஓய்வூதியகாரர்களினது அக்டோபர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகளுக்குரிய சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதாக செயலக ஓய்வூதிய பிரிவுக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

அக்டோபர் மாதத்திற்குரிய வவுச்சர்கள் அனைத்தும் தபால் மூலம் ஓய்வூதியகாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்குரிய காசோலைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

# மாதிரி விவசாயப் பண்ணை திறம்பட செயற்படுகின்றது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மாதிரி விவசாயப் பண்ணை ஒன்றை ஆரம்பித்து திறம்பட நடாத்தி வருகின்றது. சிறிலங்காவின் பொருளாதாரத் தடைக்கு ஈடு கொடுக்கும் வகையில் இப் பண்ணையில் உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பண்ணையில் போராளிகளின் பெற்றோரும் அங்கத்தவர்களாக இருந்து உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இப் பண்ணையின் மாதாந்த கூட்டமொன்றில் கலந்து கொண்ட மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சுரேஸ் அனைத்து அங்கத்தவர்களும் இப் பண்ணையின் வளர்ச்சிக்காக கூட்டாக உழைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

---

இன்னும்

யாளர்களுக்குத் தெரிவித்த ஹெலி இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த இரு நாட்களாக நடந்த போர்களில் அமெரிக்கா நான்கு போர் விமானங்களையும், ஏழு விமானப் படை வீரர்களையும் இழந்து விட்டது என்றும் தெரிவித்தார்.

ஈராக்கினால்விமானப்படையினர் கைது செய்யப்பட்டது குறித்து தெரிவிக்கும் போது இது பற்றி எதுவும் தமக்குத் தெரியாது என்றும் ஆனால் இதைத் தாம் மறுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

---

ஈராக் இஸ்ரேலின்

அதிகாரிகள் மேலதிக விபரங்களைத் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

நேற்றுக் காலை முழுவதும் இஸ்ரேலிய வானொலி மக்களுக்கு எச்சரிக்கும் வகையில் செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

டெல் அவிவ் நகரில் நேற்று அதிகாலை ''சைரன்'' ஒலி பலமாகக் கேட்டபோது மக்கள் பீதியால் ஓடியதையும், காணமுடிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜெருசலேத்திலும் இந்த ஏவுகணைகள் விழுந்ததாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்த ஏவுகணைகளில் இர...

---

## சுவிஸ் உதவும் பறவைகள் 11 குடும்பங்களுக்கு உதவி

(கிளிநொச்சி)

கணவன்மாரை இழந்தகுடும்பத்தவர்களுக்குச்சுவிஸ்லாந்து உதவும் பறவைகள் வட்டத்தினர் சுய இயங்கல் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கினார்கள்

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் பொது ஸ்தாபனங்களின் கூட்டமைப்பு வைபவரீதியாக பதினொரு குடும்பத்தவர்களுக்குச் சுவிஸ்லாந்து உதவும் பறவைகள் வட்டம் அனுப்பிய சுய இயங்கல் நிதியைக் கையளித்தது.

சமூக சேவையாளர் திரு ந. வை குகராசா தலைமையில் கணவன்மாரை இழந்த குடும்பத்தவர்களுக்கான சுய இயங்கல் நிதி கையளிப்பு வைபவம் இடம்பெற்றது. இதில் பல்வேறு பொதுஸ்தாபனப் பிரதிநிதிகளும்கலந்து கொண்டனர்

(49)

---

## ஓட்டோ குடைசாய்ந்து மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவுப் பகுதியில் நேற்றையதினம் ஓட்டோ ஒன்று குடைசாய்ந்ததில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு செல்வதற்காக கேரதீவுவரை ஓட்டோவில் பயணஞ்செய்த நல்லூரைச் சேர்ந்த சிவானந்தா (வயது 35) மகேஸ்வரி (வயது34) ஓட்டோச்சாரதி கே. வல்லிபுரம் (வயது 43) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(85) (மு

---

யுத்தம் லேசான

ரேலைத் தாக்கியதைக் கண்டித்துள்ள ஜனாதிபதி புஷ் தாக்குப் பிடிக்கும் சக்தி இஸ்ரேலுக்கு உண்டென்று நம்பிக்கை தெரிவித்துள்ளதுடன், அரபுலகின் ஆதரவு அமெரிக்க தலைமையிலான பல் தேசியப் படைகளுக்கே என்றும் கூறியுள்ளார்.

---

## வெள்ளிப் பதக்கமும் பணமுடிப்பும்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக இருபத்தைந்து வருட சேவையை நன் நடத்தையுடன் நிறைவு செய்த பன்னிரெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு வெள்ளிப் பதக்கமும்பணமுடிப்பும் வழங்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சி அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. 91ஆம் ஆண்டில் நாணயமான உத்தியோகஸ்தர் என்ற பட்டத்தையும் இவர்கள் பெறுவர் எனவும் தெரிய வருகிறது. இவ்வாறு பதக்கம் வழங்கும் இடமானது தற்போது சேவையில் இருக்கும் உத்தியோகஸ்தர்களை ஊக்குவிக்கவும் வழங்கப்படுவதாக கூறப்பட்டது.

(லோ)

## சன்லைட் 10 ரூபா

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள தனியார் கடை ஒன்றில் குடும்பத்திற்கு ஒன்று என்ற ரீதியில் சன்லைட் சோப் 10 ரூபா வீதம் இன்றும், நாளையும் விநியோகிக்கப்படவுள்ளது.

## விபத்தில் வயோதிபர் காயம்

(பளை)

பளை பிரதான வீதி வழியாக வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள்

---

# மீண்டும் தாக்குவோம்

## ஈராக் அறிவிப்பு

★ பாக்தாத் நகரில் மின் விநியோகம், நீர் விநியோகம் என்பன தடைப்பட்டிருப்பதாக பாக்தாத் வானொலி அறிவித்துள்ளது.

★ நேற்றைய தாக்குதலில் 40 ஈராக்கிய வீரர்கள் பலியாகி இருக்கலாம் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

★ யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முயற்சி மேற் கொள்ளுமாறு பாலஸ்தீன விடுதலை இயக்கம் ரியூனிசில் அறிவித்துள்ளது.

★ வளைகுடாப் பிராந்தியத்தில் பரவலாக கடற் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்திருப்பதாக அமெரிக்கா வர்த்தகக் கப்பல்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

★ பஹ்ரெயினுக்கு அப்பாலும் ஐக்கிய அரபு எமிரேட் கடற் பரப்பிலும் கூட கடற்கண்ணிகள் இருப்பதாக பஹ்ரெயின் வானொலி கூறியுள்ளது.

★ இதுவரையில் அமெரிக்கா தலைமையிலான பல்தேசப் படைகளின் 101 விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டிருப்பதாக பாக்தாத் அறிவித்துள்ளது.

★ இஸ்ரேலின காசாப்பகுதியிலும், ஜெருசலேம் பகுதியிலும் நேற்று மூன்று தடவை சைரன் ஊதப்பட்டதுடன் 45 நிமிட நேரம் இரசாயன ஆயுதப் பாதுகாப்புக் கவசங்கள் அணிந்து கொள்ள மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

★ நேற்றைய தாக்குதலின் போது சீரற்ற காலநிலை காரணமாக பல்தேசப்படைகளின் விமானங்கள் சரிவரச் செயற்பட இயலவில்லை. இதனால் கப்பற்படையின் பீரங்கிப்படகுகளிலிருந்து பெருமளவு ஏவுகணைகள் ஏவப்பட்டன.

★ ஈராக் தனது எதிரியான இஸ்ரேலை மேலும் 15 ஏவுகணைகளைக் கொண்டு தாக்கப்போவதாக ஜெருசலேமில் கண்காணிக்கப்பட்ட பாக்தாத் வானொலிச் செய்தி தெரிவிக்கின்றது.

★ ஜப்பானில் அமெரிக்கத் தூதுவரகத்திற்கு முன்பு கூடிய ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் வளைகுடா யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோஷமிட்டனர். அமெரிக்காவின் நிலையைக் கண்டித்துள்ளதுடன் அமெரிக்கத் தூதுவரிடம் மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்துள்ளனர்.

★ சிரியாவில் லட்சக்கணக்கான பாலஸ்தீனியர் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். ஈராக்கிற்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டங்களில் பெரியளவில் சதாம் ஹுசைனின் உருவப்படங்களையும் எடுத்துச் சென்றனர்.

★ பன்னாட்டுப் படைகளின் 101 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது. இதேவேளை பன்னாட்டுப் படைகள் தாம் 9 விமானங்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கின்றன. இதுவரை 11 ஈராக்கிய விமானங்களை அழித்துள்ளதாகவும் பன்னாட்டுப் படைகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றன.

★ 15 ஈராக்கிய இராணுவத்தினரை அமெரிக்க கடற்படையினர் பிடித்துள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் ரியாட்டில் தெரிவித்தார்.

★ பிலிப்பைன்ஸ் தலைநகரில் அமெரிக்கத் தூதுவராலயத்துக்கு முன்பு நேற்றுக்குண்டொன்று வெடித்தது. இருவர் காயமுற்றனர்.

★ ஈராக் விமானங்கள் பன்னாட்டுப் படை விமானங்கள் மீது வான்வெளியில் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

நேற்றுக் காலை முழுவதும் இஸ்ரேலிய வானொலி மக்களுக்கு எச்சரிக்கும் வகையில் செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

டெல் அவிவ் நகரில் நேற்று அதிகாலை "சைரன்" ஒலி பலமாகக் கேட்டபோது மக்கள் பீதியால் ஓடியதையும், காணமுடிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜெருசலேத்திலும் இந்த ஏவுகணைகள் விழுந்ததாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்த ஏவுகணைகளில் இரசாயன ஆயுதங்கள் எவையும் பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் இஸ்ரேலிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

ஈராக்மீது

ரீதியிலான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென உள்நாட்டு வற்புறுத்தல்கள் அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை வேறொரு அமைச்சர் தாக்குதல் தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது என்றார்.

இந்நிலையில் இஸ்ரேலில் இருந்துவரும் செய்திகள் இஸ்ரேல் திருப்பித் தாக்குமென்றும், ஆனால் இஸ்ரேல் எப்போது திருப்பித்தாக்கும் என்பது தெளிவாகத் தெரியவரவில்லை எனவும் தெரிவிப்பதோடு, எப்படியான தாக்குதல் எங்கே மேற்கொள்ளப்படும், எப்போது தாக்குதல் நடக்கும் என்பன போன்ற விபரங்கள் தெரியவராதபோதும் அடுத்தசில மணித்தியாலங்களில் இஸ்ரேலின் தாக்குதல் இடம்பெறும் என்றும் தெரிவிக்கின்றன.

---

இன்றைய நிலையில்

லாளர் பெரஸ்-டி குய்லர் தற்போதைய நிலையில் ஐ.நா.வினால் எதனையும் செய்துவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஈராக் மீது பதிலடித் தாக்குதல் எதனையும் தொடுக்கவேண்டாமென அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் ஆகியன இஸ்ரேலைக் கோரியுள்ளன

---

(வயது 43) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (85) (மு

---

யுத்தம் லேசான

ரேலைத் தாக்கியதைக் கண்டித்துள்ள ஜனாதிபதி புஷ் தாக்குப் பிடிக்கும் சக்தி இஸ்ரேலுக்கு உண்டென்று நம்பிக்கை தெரிவித்துள்ளதுடன், அரபுலகின் ஆதரவு அமெரிக்க தலைமையிலான பல்தேசியப் படைகளுக்கே என்றும் கூறியுள்ளார்.

---

7 பேர்

இரசாயன ஆயுதங்கள்தான் ஏவப்பட்டது என மூடிய அறையினுள் சென்றதாலும், தலைக் கவசங்களை அணிந்ததாலும் இவர்கள் மூச்சுத் திணறி இறந்துள்ளனர் எனவும் இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

---

பதுங்கு குழி

ண்ட பதுங்குகுழி ஒன்றை நிர்மூலமாக்கியது. அதிர்ச்சி அடைந்த மூவர் சிகிச்சைக்கென எடுத்துச் செல்லப்பட்டனர். இன்னுமொரு ஏவுகணைத் தாக்குதலில் பன்னிரெண்டுபேர் காயமுற்றனர். டெல்அவிவ் நகரத்தின் பல பகுதிகளில் தீப்பிடித்து உள்ளது.

---

ஈராக்கிற்கு

சர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக ஜோர்ஜ் புஷ் 'வளைகுடாப்போர் பலவாரங்களுக்கு தொடர்ந்து நீடிக்கும்' என தெரிவித்திருந்தார். அத்துடன் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியும் அடுத்த மாதக் கடைசி வரை போர் நீடிக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார்

---

அணு ஆயுதம்

அதனை அழிக்கும் வரை தாக்குதல் நடத்தப்படும் என தெரிவித்தார்.

ஆனால் ஈராக்கோ, போர் நடத்தும் அமெரிக்கா தனதுபோரை நியாயப்படுத்த இவ்வாறு தெரிவித்ததாகக் குற்றஞ் சாட்டிய

---

சன்லைட் 10 ரூபா

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள தனியார் கடை ஒன்றில் குடும்பத்திற்கு ஒன்று என்ற ரீதியில் சன்லைட் சோப் 10 ரூபா வீதம் இன்றும், நாளையும் விநியோகிக்கப்படவுள்ளது.

## விபத்தில் வயோதிபர் காயம்

(பளை)

பளை பிரதான வீதி வழியாக வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென குறுக்காக வந்த துவிச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த செல்லத்துரை (வயது 50) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஏ)

---

செய்தியாளர்

ளது. அல்ஜீரியாவும் யுத்தச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி பணித்துள்ளது. இதேவேளை இஸ்ரேல் இராணுவமும் வளைகுடாப் போர், அரசியல் நிலை தொடர்பான செய்திகளுக்குக் கடும் தணிக்கை விதித்துள்ளதோடு வெளிநாட்டுச் செய்தியாளர்களை வெளியேறுமாறும் பணித்துள்ளது.

---

அமெரிக்க

மேலும் ஈராக்கைத் தாக்கி வரும் நாடுகளுக்கெதிராக அணிதிரளுமாறு அரபுலகையும், ஏனைய நாடுகளையும் ஜோர்தான் நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குவைத் பிரச்சினை அரபு மற்றும் இஸ்லாமியக் கட்டுக்கோப்புக்குள் தீர்ப்பதற்கு ஏதுவாக தாக்குதலை நிறுத்திக் கொள்ளும்படி பல்தேசப் படைகளில் அங்கம் பெற்றுள்ள அரபு நாடுகளை ஜோர்தான் நாடாளுமன்றம் கோரியுள்ளது.

---

தண்டிக்கப்பட

ரேலிய பிரதமர் இசாக் ஷாமிர் அமெரிக்க அதிபரிடம் வற்புறுத்தியுள்ளார்.

---

★ பன்னாட்டுப் படைகளின் 101 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது. இதேவேளை பன்னாட்டுப் படைகள் தாம் 9 விமானங்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கின்றன. இதுவரை 11 ஈராக்கிய விமானங்களை அழித்துள்ளதாகவும் பன்னாட்டுப் படைகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றன.

★ 15 ஈராக்கிய இராணுவத்தினரை அமெரிக்க கடற்படையினர் பிடித்துள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் றியாட்டில் தெரிவித்தார்.

★ பிலிப்பைன்ஸ் தலைநகரில் அமெரிக்கத் தூதுவராலயத்துக்கு முன்பு நேற்றுக்குண்டொன்று வெடித்தது. இருவர் காயமுற்றனர்.

★ ஈராக் விமானங்கள் பன்னாட்டுப் படை விமானங்கள் மீது வான்வெளியில் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

---

## கிழக்கில் பெருவெள்ளம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதாகசெய்திகள் தெரிவிக்கின்றன. இந்தவெள்ளப் பெருக்கால் புகையிரத வீதிகள், தெருக்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், ஆயிரக்கணக்கில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஷெல் தாக்கு அதிர்ச்சியால் குடும்பஸ்தர் மரணம்

பலாலி முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் அதிர்ச்சியினால் 7 பிள்ளைகளின் தந்தையொருவர் திடீர் மரணமானார். மற்றொருவர் மயங்கிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

ஆவரங்கால் 10 ஆம் கட்டையைச்சேர்ந்த மா. தாமோதரம்பிள்ளை (51 வயது) என்பவரே, ஷெல் தாக்குதலின் அதிர்ச்சியினால் திடீர் மரணமானவர். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஊழியராகக் கடமையாற்றிய இவரது வீடு, இந்திய இராணுவ நடவடிக்கையின் போது ஹெலிகொப்டர் தாக்குதலால் சேதமடைந்ததினாலும், 5 வயது மகள் பலியானதினாலும் உடல்நிலைபாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த 16 ஆம் திகதி இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தினால் மேற்குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த க. இராசலிங்கம் என்பவரே மயக்கமடைந்தவராவார்.

---

குடியிருப்புக்கள்

நேற்று மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் இரு விமானங்கள் பல தடவை மாறி மாறி குண்டுகளை வீசின.

இக் குண்டு வீச்சுத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் நேற்று இரவு வரை தெரியவில்லை. இதேவேளை நேற்று மாலை ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து பல தடவைகள் ஆர்.பி.ஜி. மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களை குடியிருப்புக்களை நோக்கி இராணுவத்தினர் தொடர்ச்சியாக நடாத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஏ)

---

புதிய வழியில்

இது குறித்த தீர்மானம் ஒன்றை சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் ஐ.நா. சபையிடம் தெரிவிக்கதாக அந்த செய்தி நிறுவனம் மேலும் குறிப்பிட்டது.

## இன்று

முறைசாராக் கல்விப்பிரிவினால் கல்வித் திணைக்களத்தில் நடாத்தப்படும் குறுங்கால தொழிற் பயிற்சிச் செயலமர்வில் இன்றைய தினம் யோகட் பிஸ்கட் தயாரித்தல் பற்றிய செயலமர்வு இடம் பெறவுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.